சுற்றறிக்கை இல - LAE/2025- 56

TR - 09

எனது இலக்கம்:TR/LAE/2025/CIR
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2025.04.07

சகல மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும்
பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு,

**உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 2025.05.06**

**தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் / வட்டாரங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குச் சொந்தமான தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தல்.**

தமது சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தின் வாக்கெண்ணல் நிலையமொன்றில் தலைமை வாக்கெண்ணும் அலுவலர் / வட்டாரத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக அல்லது வாக்கெடுப்புப் பணிகளுக்கான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாகப் பணியாற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு தனிப்பட்ட வாகனம் இருந்தால் அதனை வாக்கெடுப்புக் கடமைகளுக்கு சமுகமளிப்பதற்கும் மாவட்டத்தின் மாவட்டச் செயலகம் / மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு செல்வதற்கும் மற்றும் வாக்கெடுப்பு நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் தமது வீடு நோக்கித் திரும்புவதற்கும் பயன்படுத்துவதனை அங்கீகரிக்கின்றேன். சேவையாற்றும் மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு அவ்வாறான கடமைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அந்த மாவட்டத்திற்கு செல்வதற்காக தமது தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்திக் கொள்வதாயின் அதற்காக குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது பிரதி /உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் முன்னனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். **அலுவலர் சேவையாற்றும் மாவட்டத்திற்கு வெளியே மிகத் தொலைவிலுள்ள மாவட்டமொன்றில் கடமை ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திற்கு அதிக செலவினத்தை ஏற்படுத்தாதிருப்பின் மாத்திரமே அங்கீகாரத்தை வழங்குதல் வேண்டும்.**

02). கடமைக்குச் செல்வதற்காக தனது தனிப்பட்ட வாகனத்தினை பயன்படுத்துவதற்கு அங்கீகாரத்தைக் கோருகின்ற அலுவலர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்ட வகையில் அனுமதி வழங்குவதற்கும் தாபனவிதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 8:2 பிரிவின்படி பெற்றோல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீட்டருக்கு 12.00 ரூபாவும் டீசல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீட்டருக்கு 8.00 ரூபாவும் என்ற அடிப்படையில் அக்கடமைப் பயணத்திற்காக கிலோமீட்டர் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதனை அங்கீகரிக்கின்றேன். தனிப்பட்ட வாகனத்தை எடுத்துவரும் இந்த அலுவலர்களுக்கு வாகனம் பிரயாணம் செய்த தூரத்திற்கு ஏற்ப (போவதற்கும் வருவதற்கும்) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விசேட கொடுப்பனவொன்றினை செலுத்த முடியும். இக்கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்வதற்காக வாகனத்தினைப் பயன்படுத்திய அலுவலரினால் பொது 35 உறுதிச்சீட்டில் (வவுச்சரில்) கையொப்பமிடப்பட்டு பிரயாணச் செலவைக் கோரும் உறுதிச்சீட்டுடன் (வவுச்சருடன்) சமர்ப்பித்தல் வேண்டும்.

| இல | விபரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | சேவை நிலையம் அமைந்துள்ள மாவட்டத்திற்குள் | 1500.00 |
| 2. | நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 50 வரை | 2600.00 |
| 3. | நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 100 வரை | 3400.00 |
| 4. | நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 150 வரை | 4200.00 |
| 5. | நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 200 வரை | 5000.00 |
| 6. | நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 250 வரை | 5800.00 |
| 7. | நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 300 வரை | 6600.00 |
| 8. | நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகருக்கான தூரம் கி.மீ. 300 இற்கு மேல் | 7400.00 |

2ஆம் பக்கத்திற்கு

03). நிபந்தனைகள்

I. வாகனம் சிறந்த ஓட்ட நிலைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

II. வாகனமானது மக்கள் கொந்தளிப்பு, கலகம், குழப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பூரண காப்புறுதி செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் ஏதாவது திடீர் விபத்தொன்றின்போது அல்லது வேறு ஏதாவது முறையில் வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டால் அதன் சகல பொறுப்புக்களையும் காப்புறுதி நிறுவனத்தினால் அல்லது அவரால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அதற்காக தேர்தல் ஆணைக்குழு எந்தவொரு முறையிலும் தலையீடு செய்யமாட்டாது.

III. குறித்த வாகனம் அலுவலருக்கு அல்லது அவரது துணைக்கு உரித்துடையதாக இருத்தல் வேண்டும். விசேட காரணங்களின் கீழ் விவாகமாகாத அலுவலர்களுக்கு தந்தை / தாய் /சகோதர சகோதரிகளின் அல்லது விவாகமான அலுவலர்களின் தந்தை / தாய் /பிள்ளைகளுக்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்குதல் தொடர்பாக கவனத்திற் கொள்ள முடியும். (அதனை உறுதிப்படுத்துவதற்காக V-4 படிவத்தை நிரப்பித் தரும் சந்தர்ப்பத்தில் வாகனத்தின் வருமான அனுமதிப் பத்திரத்தின் பிரதியினை இணைத்திருத்தல் வேண்டும்.)

IV. குறித்த வருடத்தின் ஆரம்பத்தில் தமது திணைக்களத் தலைவரினால் கடமை நடவடிக்கைகளின் பொருட்டு கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட வாகனத்தினைப் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிக் கடிதத்தின் பிரதியுடன் கோரிக்கை விடுத்தால் மாத்திரமே கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்தினைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்க முடியும்.

V. **இந்த வாகனத்திற்கு அலுவலர் கடமையாற்றும் அலுவலகத்தினால் அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினால் அல்லது வேறேதேனும் விதத்தில் எரிபொருள் வழங்கப்படக்கூடாது. அதனால் அவ்வாறான கோரிக்கைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொறுப்பேற்றலாகாது.**

04). தனது தனிப்பட்ட வாகனத்தில் வருகைதரும் தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் / உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கடமைக்கு சமுகமளித்ததன் பின்னர் உடனடியாக V- 4 படிவத்தை இரு பிரதிகளில் பூரணப்படுத்தி வாகனத்தின் வருமான அனுமதிப் பத்திரத்தினது பிரதியுடன் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும். V – 4 படிவத்தின் மாதிரியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்பு அலுவல்கள் நிறைவடைந்ததன் பின்னர் அலுவலர் திரும்பி வருவதற்கு முன்னர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) அப்படிவத்தின் “ஆ” பகுதியினை பூரணப்படுத்தி ஒரு பிரதியை குறித்த அலுவலரிடம் கையளித்தல் வேண்டும். குறித்த அலுவலர் **பிரயாணச் செலவினைக் கோரும் போது அந்த V-4 படிவத்தை உறுதிச்சீட்டுடன் (வவுச்சருடன்) இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். இச்சான்றிதழ் இல்லாத எந்தவொரு பிரயாணச் செலவு உறுதிச்சீட்டிற்கும் கொடுப்பனவை மேற்கொள்ளாதிருப்பதற்கான பொறுப்பை கொடுப்பனவு உத்தியோகத்தர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.**

05). தாம் வாகனத்தைக் கொண்டு வருவதாக தெரிவத்தாட்சி அலுவலர்/பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே தனிப்பட்ட சாரதியொருவரை அழைத்து வருவதாயின் அதற்கும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவருக்குக் கொடுப்பனவு செய்யப்படும் கொடுப்பனவுகள் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தமது தனிப்பட்ட வாகனத்துடன் சாரதியினை அழைத்து வரும்போது கொடுப்பனவு செய்யப்படும் விதத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். **இக்கொடுப்பனவு குறித்த சாரதியின் பெயரில் மட்டுமே செய்யப்படும்.** அலுவலரினால் கையளிக்க வேண்டிய V-4 படிவத்திற்கு மேலதிகமாக, சாரதியினால் V-5 படிவத்தை இரு பிரதிகளில் பூரணப்படுத்தி உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும். அவரால் அதன் “ஆ” பகுதி பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் ஒரு பிரதியை சாரதியின் வருகைச் சான்றிதழாக பிரயாணச் செலவு உறுதிச்சீட்டுடன் இணைத்து சமர்ப்பிப்பதற்காக சாரதியிடம் கையளித்தல் வேண்டும். உறுதிச்சீட்டுடன் (வவுச்சருடன்) சாரதி அனுமதிப் பத்திரத்தின் பிரதியினையும் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு சாரதியை அறிவுறுத்தல் வேண்டும். V-5 படிவமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட **வாகனங்களைக் கொண்டுவராத எந்தவொரு அலுவலருக்கும் வாகனத்தைக் கொண்டு வந்ததாக சான்றிதழ் வழங்குவதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பதுடன்** அவ்வாறு வாகனங்களைக் கொண்டு வராது சான்றிதழைக் கோருகின்ற அலுவலர்கள் தொடர்பான அறிக்கைகளைப் பேணி எனக்கு அனுப்பி வைப்பதற்கு தயவுசெய்து நடவடிக்கை மேற்கொள்ளவும்.



3 ஆம் பக்கத்திற்கு

06). மாவட்டங்களில் போதியளவான பதவிநிலை அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் வெளியிலிருந்து பெருமளவிலான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களைப் பெற்றுக் கொள்ளும் **கம்பஹா, களுத்துறை, கேகாலை மற்றும் புத்தளம்** போன்ற மாவட்டங்களில் **வட்டாரக் கடமைகளில் ஈடுபடுத்துவதன் பொருட்டு போதியளவான எண்ணிக்கையில் வாகனங்கள் காணப்படாதவிடத்து** வட்டாரக் கடமைகளுக்காக வெளியிலிருந்து வரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் வாகனங்களை அதற்காக ஈடுபடுத்திக்கொள்ள முடியும். **இதற்காக மாருதி, மார்ச், ஸ்டார்லெட் போன்ற சிறிய வாகனங்களை ஈடுபடுத்திக்கொள்ளக் கூடாது.** ஏனைய மாவட்டங்களில் வட்டாரத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அரச வாகனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன் மாவட்டத்திற்குள் கடமையாற்றும் அலுவலர்களுக்கு வட்டாரக் கடமைகளுக்காக அவர்களின் தனிப்பட்ட வாகனங்களை அல்லது ஒதுக்கப்பட்ட வாகனங்களை ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்குவது சிறந்ததாகும்.

07). வட்டாரத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமனம் பெற்றுள்ள அலுவலர்கள் கொண்டுவரும் வாகனங்களுக்கு தனிப்பட்ட சாரதிகளை ஈடுபடுத்திக்கொள்ளல் வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் (போக்குவரத்து) CR புத்தகத்தினை தயாரித்து அப்படிவத்திற்கமைய குறித்த விபரங்களை பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

08. வட்டாரக் கடமைகளில் ஈடுபடும் வட்டாரத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு, அவர்கள் கொண்டு வரும் வாகனங்கள் ஆபத்து நிலைமைகளுக்கு முகம் கொடுத்தவாறு கடமைகளில் ஈடுபட வேண்டியிருப்பதால் மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக ஆயிரம் ரூபாவினை (1000.00) செலுத்த முடியும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

**பிரதிகள் :-**

1. கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு
3. மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி)
4. தலைமை நிதி அலுவலர்
5. தலைமை உள்ளக கணக்காய்வாளர்
6. கணக்காளர் (கொடுப்பனவுகள்)

} தயவுடன் தகவலுக்காக

**குறிப்பு :- மேலே 06 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்ட மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வட்டாரக் கடமைகளுக்காக வெளியிலிருந்து வருகை தருகின்ற உதவித் தெரிதவத்தாட்சி அலுவலர்களின் சொந்த வாகனங்களை வட்டாரக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு அவசியமெனில் அதற்கு எனது முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.**

4 ஆம் பக்கத்திற்கு

## உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 2025.05.06
## உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் கொண்டுவரப்படுகின்ற தனிப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்கள்

1. அலுவலரின் பெயர்: ......................................................................................
2. நிரந்தரப் பதவி :.............................................................................................
3. அலுவலக முகவரி: .........................................................................................
4. தனிப்பட்ட முகவரி: .......................................................................................
5. கையடக்க தொ.பே. இலக்கம்: ..........................................................................
6. கொண்டுவரப்படுகின்ற தனிப்பட்ட வாகனம் தொடர்பான விபரங்கள்
   - வாகனத்தின் இல:........................................ (பெற்றோல் /டீசல்) *
   - வாகனம் தனது / வாழ்க்கைத் துணையின் என்பது பற்றி:......................................

   **(உறுதிப்படுத்துவதற்காக வருமான அனுமதிப்பத்திரத்தின் நிழற் பிரதியொன்றை இத்துடன் இணைக்கவும்.)**
7. தெரிவத்தாட்சி அலுவலரிடம் அறிக்கையிட்ட திகதி மற்றும் நேரம்

திகதி : 2025.................... நேரம் : ........................

நான் 2025................. ஆம் திகதி மேலே காணப்படும் இலக்கத்தையுடைய எனது/ வாழ்க்கைத் துணையின் வாகனத்தில்* ........................................................... மாவட்டத்திற்கு தேர்தற் கடமைகளுக்கு வருகை தந்தேன் என்பதை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.................................
பூரண கையொப்பம் :
(அலுவலரின் பெயருடன் பதவி முத்திரை)

2025............

.......................................................................................................................................

### பகுதி "ஆ" (அலுவலக உபயோகத்திற்காக)

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திரு /திருமதி /செல்வி ........................................................................ அவர்கள் .................... ஆம் இலக்க வாகனத்தில் வருகை தந்தாரென நான் தனிப்பட்ட முறையில் திருப்தியடைகின்றேன். இவ்வலுவலர் 2025............ ஆம் திகதி ..................... மணிக்கு வருகை தந்தாரெனவும் 2025......................... ஆம் திகதி ................. மணிக்கு அவ்வாகனத்தில் திரும்பிச் சென்றார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : 2025.................. பூரண கையொப்பம்: : ........................
உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து)
(பெயருடனான பதவி இலச்சினையை இடவும்.)

**கவனிக்க:** தனிப்பட்ட வாகனங்களைக் கொண்டுவரும் மேற்கூறப்பட்ட சகல அலுவலர்களும் வருகைதந்த உடனேயே இந்த படிவத்தை இரண்டு பிரதிகளில் பூர்த்தி செய்து தனது வாகனத்தின் வருமான அனுமதிப்பத்திரத்தின் நிழற் பிரதியொன்றுடன் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும். திரும்பிச் செல்வதற்கு முன்பதாக இதன் "ஆ" பகுதியை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) மூலமாக பூர்த்தி செய்து ஒரு பிரதியை எடுத்துக்கொள்ள வேண்டும். கொடுப்பனவுகளுக்கான வவுச்சருடன் அந்தப் பிரதியை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- விஷேட காரணங்களின் கீழ் விவாகமாகாத அலுவலர்களுக்கு தந்தை, தாய், சகோதர சகோதரிகளுக்குச் சொந்தமான வாகனங்களையும், விவாகமான அலுவலர்களுக்கு - தந்தை, தாய், பிள்ளைகளுக்குச் சொந்தமான வாகனங்களையும் பயன்படுத்த முடியும்.

**(* - தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்.)**

5 ஆம் பக்கத்திற்கு

(இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தவும்)

## உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 2025.05.06

**உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் எடுத்துவரப்படுகின்ற தனிப்பட்ட சாரதிகளுக்கான வரவுச் சான்றிதழ்.**

01. வாகனம் உரித்துடைய அலுவலரின் பெயர் : ........................................................
02. பதவி : ........................................................
03. அமைச்சு / திணைக்களத்தின் பெயரும் முகவரியும் : ........................................................
04. கொண்டுவரப்பட்ட வாகனத்தின் இல. : ........................................................
05. வாகனத்தின் சாரதியாக ஈடுபடுத்தப்பட்ட நபரின் பெயர்: ........................................................
06. அவரது முகவரி : ........................................................
07. தேசிய அடையாள அட்டை இல : ........................................................
08. சாரதி அனுமதிப்பத்திர இல : ........................................................
09. சாரதியின் கையொப்பம் : ........................................................

* தலைமை வாக்கெண்ணும் அலுவலராக / பிரதி தலைமை வாக்கெண்ணும் அலுவலராக / உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக ........................................ மாவட்டத்தின் கடமைகளுக்காக மேலே காணப்படும் இலக்கத்தைக் கொண்ட வாகனத்தில் வருகைதந்த நான் அந்த வாகனத்தின் சாரதியாக திரு. ........................................ என்பவரை கடமையில் ஈடுபடுத்தினேன் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : 2025…………..

........................................................

உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் கையொப்பம்.
(பெயருடன் இலச்சினையைப் பொறிக்கவும்.)

........................................................................................................................

## பகுதி “ஆ” (அலுவலக உபயோகத்திற்காக)

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலருக்குச் சொந்தமான ........................................ ஆம் இலக்க வாகனத்தின் சாரதியாக திரு. ........................................................ என்பவர் வருகை தந்தாரென்பதை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : 2025…….

........................................................

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து)
(பெயருடனான இலச்சினையை இடவும்.)

**கவனிக்க** : இந்தப் படிவத்தை இரண்டு பிரதிகளில் பூர்த்தி செய்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் (போக்குவரத்து) கையளித்தல் வேண்டும். “ஆ” பகுதியை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து) மூலமாக பூர்த்தி செய்து ஒரு பிரதியை எடுத்துக் கொள்ள வேண்டும். இதைச் சாரதியின் பிரயாணச் செலவுக்கான வவுச்சருடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். சாரதி அனுமதிப் பத்திரத்தின் நிழற் பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(*தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

6 ஆம் பக்கத்திற்கு

(LAE/2025-56 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியுடன் தொடர்புடைய படிவம்)

## உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 2025.05.06

## வட்டாரத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குச் சொந்தமான தனிப்பட்ட வாகனங்களை தேர்தல் கடமைகளுக்காக பயன்படுத்தல்

| அலுவலரின் பெயர் | நிரந்தரப் பதவி | அமைச்சு/ திணைக்களம் | வாகன இல. | எரிபொருள் பயன்பாடு (லீட்டருக்கு கி.மீ.) | அலவலரின் கையொப்பம் | உதவித் தெரிவத்தாட்சி அலுவலரால் (போக்குவரத்து) பூர்த்தி செய்யப்படல் வேண்டும். | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மாவட்டத்திற்கு அறிக்கைப் படுத்தியதன் பின்னர் மைலோ மீட்டர் | உதவித் தெரிவத் தாட்சி அலுவலர் ஈடுபடுத்திக் கொள்ளப் பட்ட வலயம் | வட்டாரத்தினுள் ஓட்டத்தின் பின்னர் மைலோ மீட்டர் | ஓடிய மொத்த கி.மீ. எண்ணிக்கை | உதவித் தெரிவத் தாட்சி அலுவலர் (போக்குவரத்து) ஒப்பம் |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |